(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 112/2019 அ.சா.14

| | | |
|---|---|---|
| Name | : | திரு. பாண்டியராஜன் |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 10.11.2025.

முதல் விசாரணை:-

நான் தத்தனேரியில் குடியிருந்து வருகிறேன். சிவில் கான்ட்ராக்டர் வேலை செய்து வருகிறேன். 16.06.2018 ம் தேதி இரவு 10 மணியளவில் ஆர்வி நகரில் உள்ள என் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தபோது மாரியம்மாள் என்பவர் வீட்டின் வாசலில் கூட்டமாக இருந்தது. உள்ளேபோய் பார்த்தேன். மாரியம்மாள் கத்தியால் குத்தப்பட்டு இறந்துகிடந்தார். வெளியில் போலீசார் இருந்தார்கள். அது சம்பந்தமாக விசாரணைக்கு பஞ்சாயத்தாராக இருக்கும்படி போலீசார் கேட்டார்கள். அருகில் இருந்த மாரியம்மாளின் சொந்தக்காரர்களை போலீசார் விசாரித்தார்கள். அது சம்பந்தமாக கையெழுத்து கேட்டார்கள் போட்டுக்கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**பிரேத விசாரணையை போலீசார் எத்தனை மணிக்கு ஆரம்பித்தார்கள் என்று கேட்டால் இரவு 10.30 மணி இருக்கும். எத்தனை மணிக்கு முடித்தனர் என்று கேட்டால் சுமார் 11 மணி இருக்கும். நான் வீட்டிற்கு வெளியே இருந்து தான் பார்த்தேன். உள்ளே போய் பார்க்கவில்லை.**

Sd/- பாண்டியராஜன்

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN Date: 2025.11.12 12:32:40 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.